சசிகலா புஷ்பா மற்றும் பலர்

எதிர்

தமிழ்நாடு மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீடு எண் 855/ 2019)

2019-ம் ஆண்டு மே 07-ம் தேதி

[மாண்புமிகு நீதியரசர்கள் திருமதி.ஆர்.பானுமதி மற்றும் திரு.எஸ்.அப்துல் நசீர்]

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 : பிரிவு 340 மேல்முறையீட்டாளர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குரை அதிகார ஆவணத்துடன் முன்பிணை மனுக்களை தாக்கல் செய்தனர் - வழக்குரை அதிகார ஆவணத்தைத் தாக்கல் செய்யும் போது, அதில் மேல்முறையீட்டாளர்கள் தங்கள் வழக்குரைஞர் முன் 17.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் கையெழுத்திட்டதாகக் கூறப்பட்டது - பிணை மனு மற்றும் வழக்குரை அதிகார ஆவணத்தின் நிலைக்கத்தக்க தன்மையை எதிர்த்து, எதிர்மேல்முறையீட்டாளர் - மாநில அரசு முதனிலை ஆட்சேபனையை தாக்கல் செய்து, வழக்குரை அதிகார ஆவணத்தில் 18.08.2016-ஆம் தேதியிட்ட கையொப்பம் இருப்பதாக சமர்ப்பித்தது, இருப்பினும், முதல் மேல்முறையீட்டாளர் புதுதில்லியில் இருந்து சிங்கப்பூருக்கு 17.08.2016-ஆம் தேதியன்று 23.15 மணிக்கு புறப்பட்டார், மூன்றாவது மேல்முறையீட்டாளர்

பெங்களூரிலிருந்து சிங்கப்பூருக்கு 18.08.2016-ஆம் தேதியன்று காலை 9.30 மணிக்கு புறப்பட்டார் - உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு 29.08.2016-ஆம் தேதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி, கூறப்பட்ட ஆரம்ப ஆட்சேபனை தொடர்பாக தங்கள் விளக்கத்தை வழங்குமாறு உத்தரவிட்டது - அதன்படி மேல்முறையீட்டாளர்கள் முன்னிலையாகி, வழக்குரை அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி கவனக்குறைவாக நடந்த பிழை என்று கூறினர் - உயர்நீதிமன்றம் அந்த விளக்கத்தை திருப்திகரமாக இல்லாததாக முடிவு செய்து, அந்த ஆவணம் போலியானது என்று தோன்றுவதாகவும், மதுரைக்கு வெளியே கையெழுத்திட்டு செயல்படுத்தப்பட்டதாக கூறியதுடன், மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக புகார் அளிக்குமாறு பதிவாளருக்கு (நீதித்துறை) உத்தரவிட்டது - அதன்படி, மேல்முறையீட்டாளர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள்.193,466,468 மற்றும் 471 ஆகியவற்றின் கீழ் புகார் அளிக்கப்பட்டுள்ளது - மனக்குறைவுற்ற மேல்முறையீட்டாளர்கள் இம்மேல்முறையீட்டு வழக்குகளைத் தாக்கல் செய்தனர் - <u>தீர்வு</u> : நீதிமன்றத்தின் எல்லைக்கு வெளியே பொய்யாவணம் புனைதல் செய்யப்பட்டாலும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே செய்யப்பட்டாலும், அது நீதியின் நிர்வாகத்தை பாதிக்கும் ஒன்றாக கருதப்படும் என்ற முன்மொழிவு குறித்து இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது - ஆனால் இந்த வழக்கில், முன்பிணை கோரி மேல்முறையீட்டாளர்கள் தாக்கல்

செய்த வழக்குரை அதிகார ஆவணத்தை ஒரு பொய்யாவணம் என்று கூற முடியாது - மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தில் தங்கள் கையொப்பங்களை ஒப்புக் கொண்டு, அது மதுரையில் 18.08.2016-ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்டதாக தவறாக பதிவு செய்யப்பட்டதாக வேண்டுரைத்தனர் - மேல்முறையீட்டாளர்கள் அளித்த விளக்கம் நம்பத்தகுந்ததாகத் தோன்றியது - பொய்யாவணம் புனைதல் என்பது தவறான ஆதாயத்தை அடைவது அல்லது மற்றொருவருக்கு தவறான இழப்பு அல்லது காயத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வேண்டுமென்றே ஏமாற்றுவதைக் குறிக்கிறது - நீதிமன்றத்தில் ஒரு பொய்யாவணம் புனைதல் நடைபெற்றுள்ளது என்று கருதுவதற்கு குற்ற மனநிலை என்பது இன்றியமையாத கருப்பொருள் ஆகும் - கூறப்பட்ட தவறை அல்லது பிழையை பொய்யாவணம் புனைதல் என்று உயர் நீதிமன்றம் தீர்வளித்தது நியாயமல்ல - மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக குற்றவியல் முறையீட்டைப் பதிவு செய்வதற்கான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது - தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 195 (1)(ஆ).

தண்டனைச் சட்டம், 1860 : பிரிவு 195 (1)(ஆ) – குற்ற நடவடிக்கையின் கீழ் - <u>தீர்வு</u> : பிரிவு 340-இன் கீழ், நீதியின் நலனுக்கு உகந்ததாக இருந்தால் மட்டுமே அரசுத்தரப்பில் வழக்குத் தொடரப்பட வேண்டும், ஒவ்வொரு வழக்கிலும் அல்ல - பிரிவு 195(1)(ஆ)-இன் கீழான குற்றச்செயல் குறித்து புகார் அளிக்கத்

தொடர்வதற்கு முன், நீதிமன்றம் "நீதியின் நலனுக்கு உகந்ததாகும்" என்று திருப்திப்படுத்த வேண்டும் - கு.வி.மு.ச பிரிவு 340-இன் விளக்கப்படி, நீதியின் நலன் தேவைப்பட்டால் மட்டுமே அத்தகைய போக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைக் காட்டுகிறது, அனைத்து வழக்குகளிலும் அல்ல – குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 340.

மாண்பமை நீதிமன்றம் இம்மேல்முறையீட்டு வழக்குகளை முடிவு செய்து, பின்வருமாறு தீர்வளித்தது.

<u>தீர்வு</u> : 1.1 குற்றவியல் புகார் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு, அந்தப் புகார் பதிவு செய்யப்படுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதை நீதிமன்றம் திருப்திப்படுத்திக் கொள்வது அவசியம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நீதிமன்றம் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 340-இன் உண்மையான சொற்களைப் பயன்படுத்த வேண்டியதில்லை. ஆனால், ஒரு விசாரணை மேற்கொள்ளப்படுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்ற தனது மனநிறைவைக் குறிக்கும் ஒரு காண்முடிவை நீதிமன்றம் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

இக்பால் சிங் மார்வா எதிர் மீனாட்சி மார்வா (2005) 4 **எஸ்.சி.சி** 370:

[2005] 2 **எஸ்.சி.ஆர்** 708 – **என்ற வழக்கின் முன்தீர்முடிவு சார்வுறப்பட்டது.**

2. வழக்குரை அதிகார ஆவணத்தின்படி, மேல்முறையீட்டாளர் எண். 1 மற்றும் 3 ஆகியோர் 17.08.2016 அன்று மதுரையில் கையொப்பமிட்டது போலத் தெரிந்தது. ஆனால், உண்மையில் முதல் மேல்முறையீட்டாளர் மதுரைக்குச் செல்லவில்லை; அவர் 17.08.2016-ஆம் தேதியன்று இரவு 11.15 மணிக்கு புது டெல்லியிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த ஆணையுறுதி ஆவணத்தில், முதல் மேல்முறையீட்டாளர் அது ஒரு எழுத்துப் பிழை என்று காரணம் கூறினார். மேல்முறையீட்டாளர் எண். 1 கூறியது என்னவென்றால், 16.08.2016-ஆம் தேதியன்று, அவரும் அவரது மகன் - மேல்முறையீட்டாளர் எண். 2-உம் - புது டெல்லியில் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிட்டதாகவும், பின்னர் பெங்களூருவில் இருந்த மேல்முறையீட்டாளர் எண். 3 மூலம் அதில் கையொப்பமிடப்பட்டதாகவும் தெரிவித்தார். அந்த வழக்குரை அதிகார ஆவணத்தைப் பெற்ற பிறகு, மேல்முறையீட்டாளர் எண். 3 அதே நாள் மாலையே சாலை வழியாக மதுரைக்கு வந்து அதை வழக்குரைஞரிடம் ஒப்படைத்துவிட்டு, அதே நாள் சாலை வழியாகவே மீண்டும் பெங்களூருவுக்குத் திரும்பிச் சென்றதாகவும், அதன் பிறகு மேல்முறையீட்டாளர் எண். 3, 18.08.2016-ஆம் தேதியன்று காலை 09.30 மணிக்கு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டது. மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின்

மதுரை கிளையில் வழக்குரை அதிகார ஆவணம் தாக்கல் செய்யப்பட்டபோது, அது தவறுதலாக 18.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் கையொப்பமிடப்பட்டது என்று பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் அளித்த இந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தெரிந்தது, மேலும் 29.08.2016-ஆம் தேதியிட்ட அவர்களின் ஆணையுறுதி ஆவணத்தை நம்பாமல் இருக்க எந்தக் காரணமும் இல்லை.

3. வழக்குரை அதிகார ஆவணம் என்பது ஒரு தரப்பினர் சார்பாக ஒரு வழக்குரைஞர் முன்னிலையாக அதிகாரம் அளிக்கும் ஒரு ஆவணம் மட்டுமேயாகும், மேலும் பொதுவாக, அது வழக்கின் தகுதிக்கூறுகளில் எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. ஒரு தரப்பினர் ஏன் வேண்டுமென்றே வழக்குரை அதிகார ஆவணத்தில் தவறான தேதி மற்றும் இடத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள தங்கள் கையொப்பங்களை ஒப்புக்கொண்டனர். மேல்முறையீட்டாளர்களின் ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்ட சம்பவங்களின் வரிசை, மோசடி வழக்கை உருவாக்கவில்லை. மேல்முறையீட்டாளர்கள் ஆணையுறுதி ஆவணத்தில் வைத்த கோரிக்கையையும், அவர்கள் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானபோது தங்கள் விளக்கத்தில் மீண்டும் வலியுறுத்தியதையும், உயர் நீதிமன்றம் ஏன் நிராகரித்தது என்று எந்தக் காண்முடிவையும் பதிவு செய்யவில்லை.

4. மோசடி செய்தல் என்பது நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே செய்யப்பட்டிருந்தாலும், அதுவும் நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் ஒன்றாகவே கருதப்படும் என்ற இந்த சட்டக் கருத்தில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் முன்பிணை கோரி தாக்கல் செய்த வழக்குரை அதிகார ஆவணத்தைப் போலியான ஆவணம் என்று கூற முடியாது. மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள தங்கள் கையொப்பங்களை ஒப்புக்கொண்டனர். அவர்களது கூற்று என்னவென்றால், 18.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது என்று பதிவு செய்யப்பட்டது தவறுதலாகப் பதிவு செய்யப்பட்டது என்பதுதான். நிச்சயமாக, வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள கூற்று ஒரு சரியற்ற அறிக்கை ஆகும். அந்தக் குறை அல்லது பிழையை மோசடி என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது நியாயமானதல்ல. மோசடி என்பது, தவறான ஆதாயத்தை அடைவதற்கோ அல்லது மற்றவர்களுக்குத் தவறான இழப்பு அல்லது காயத்தை ஏற்படுத்துவதற்கோ வேண்டுமென்றே செய்யும் ஏமாற்று வேலையைக் குறிக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லாததால், மேல்முறையீட்டாளர்கள் மீது மோசடி குற்றஞ்சாட்டியது உயர் நீதிமன்றத்திற்கு நியாயமானதல்ல. வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள

கூற்று தவறானது என்று கருதிக் கொண்டாலும் கூட, வழக்குரை அதிகார ஆவணத்தில் வெறுமனே ஒரு சரியற்ற அறிக்கை இருப்பது போலியான ஆவணத்தை உருவாக்கியதாக அமையாது, மேலும் மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப் புகாரைப் பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்க, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 340-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணமாக இருக்க முடியாது. மேல்முறையீட்டாளர்கள் சேதம் அல்லது காயம் அல்லது வேறு ஏதேனும் செயல்களைச் செய்ய நோக்கம் கொண்டிருந்தனர் என்று காட்டுவதற்கு முதல் நோக்கில் சான்று எதுவும் இல்லை. வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள சர்ச்சைக்குரிய கூற்று, தவறாகக் குறிப்பிடும் நோக்கம் இல்லாமல், ஒரு தற்செயலான பிழையாகவே தோன்றுகிறது என்பதால், மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப் புகாரைப் பதிவு செய்ய உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு நிலைநிறுத்தப்பட முடியாது, மேலும் அது நீக்கறவு செய்யப்படத் தகுதியானது.

அமர்சங் நாதாஜி எதிர் ஹர்திக் ஹர்ஷத்பாய் படேல் (2017) 1 எஸ்.சி.சி 117; *சிந்தாமணி மால்வியா எதிர் ம.பி. உயர்நீதிமன்றம்* (2018) 6 எஸ்.சி.சி 15 - என்ற வழக்கின் முன்தீர்முடிவு சார்வுறப்பட்டது.

பெப்சி ஃபுட்ஸ் லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் சிறப்பு நீதிபதி நடுவர் மற்றும் பலர் (1998) 5 எஸ். சி. சி 749; *மத்திய புலனாய்வுப்*

பிரிவு எதிர் ரவிசங்கர் ஸ்ரீவஸ்தவா, ஐஏஎஸ் மற்றும் ஒருவர் (2006) **7 எஸ். சி. சி 188: [2006] 4 சப் எஸ்.சி.ஆர் 450 - என்ற வழக்கின் முன்தீர்முடிவு மேற்கோள் காட்டப்பட்டன.**

<u>பார்வையிடப்பட்ட முன்தீர்முடிவுகள்</u>

[2005] 2 எஸ். சி. ஆர் 708	**பத்தி 10**	**சார்வுறப்பட்டது**
(2017) 1 எஸ். சி. சி 117	**பத்தி 20**	**சார்வுறப்பட்டது**
(2018) 6 எஸ்.சி.சி 15	**பத்தி 20**	**சார்வுறப்பட்டது**
(1998) 5 எஸ்.சி.சி 749	**பத்தி 22**	**மேற்கோள் காட்டப்பட்டது**
[2006] 4 சப். எஸ். சி. ஆர் 450	**பத்தி 23**	**மேற்கோள் காட்டப்பட்டது**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 855/2019.

மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு குற்ற.அ.ம. (ம.அ.) எண் 15370/2016-இல் 14.09.2016-ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இம்மேல்முறையீடு எழுகிறது.

உடன்

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 856, 857, 858, 859/2019

<u>முன்னிலையாகும் வழக்குரைஞர்கள்</u>

மேல்முறையீட்டாளர்களுக்காக : மூத்த வழக்குரைஞர் திரு.சஞ்சய் ஆர். ஹெக்டே, திரு.நிதின் சரவணன், திரு.பி.ராமசாமி, திரு.அருணிமா சிங்,

திரு.பிரஞ்சல் கிஷோர்,
திரு.பிரியதர்ஷினி, திரு.டி.அபினவ் ராவ்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக : திரு.எம். யோகேஷ் கண்ணா,
திரு.எஸ்.பார்த்தா சாரதி,
திரு.எஸ்.ராஜா ராஜேஷ்வரன்.

தீர்ப்புரை

மாண்பமை நீதிமன்றத்தின் பின்வரும் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திருமதி.ஆர்.பானுமதி அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடுகள் [சி.அ.ம. (குற்றவியல்) எண். 7252, 7287 மற்றும் 8206 / 2016] மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட கு.அ.ம. (ம.அ) எண் 15370/2016-இல் மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வு முன்பிணை மனுவை தள்ளுபடி செய்து வழங்கிய 14.09.2016-ஆம் தேதியிட்ட தீர்ப்புரையில் இருந்து எழுகின்றன. அதே தீர்ப்புரையின் மூலம், உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர், வழக்குரை அதிகார ஆவணத்தில் கையெழுத்திட்டதில் அவர்கள் செய்ததாகக் கூறப்படும் பொய்யாவணம் புனைதல் தொடர்பாக, மேல்முறையீட்டாளர்கள் மீது அதிகார எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளிக்க பதிவாளருக்கு (நீதித்துறை) உத்தரவிட்டார். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, பதிவாளர் (நீதித்துறை) 19.09.2016-ஆம் தேதியன்று மதுரை கே.புதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார், அதன் அடிப்படையில் இ.த.ச. பிரிவுகள் 193, 466, 468 மற்றும் 471-

இன் கீழ் தண்டனைக்குரியக் குற்றங்களுக்காக குற்ற எண் 1331/2016-இல் மேல்முறையீட்டாளர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

3. முதல் மேல்முறையீட்டாளர் அப்போதைய ராஜ்யசபா உறுப்பினர் மற்றும் அதிமுக அரசியல் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட உறுப்பினர் ஆவார். மூன்றாவது மேல்முறையீட்டாளர் முதல் மேல்முறையீட்டாளரின் கணவர் ஆவார். கடந்த 2011-ஆம் ஆண்டு மேல்முறையீட்டாளர்களின் வீட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்து வந்த பானுமதி என்பவர், மேல்முறையீட்டாளர்களின் வீட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, தனக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண் 5/2016-இல் அனைத்து மேல்முறையீட்டாளர்கள் மீதும் இதச பிரிவுகள் 294(ஆ), 323, 344, 354(அ) மற்றும் 506(i) மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம், 2002-இன் பிரிவு 4-இன் கீழ் ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் மேல்முறையீட்டாளர் அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்து, அச்செயல் தனக்கு எதிரான அரசியல் பழிவாங்கலின் விளைவு என்று கூறினார்.

4. மேல்முறையீட்டாளர்கள் கு.அ.ம (ம.அ)எண்.15370/ 2016-இல் கு.வி.மு.ச. பிரிவு 438-இன் கீழ் மேல்முறையீட்டாளர்களின் 18.08.2016-ஆம் தேதியிட்ட கையொப்பத்துடன் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் முன்பிணை மனு தாக்கல் செய்தனர். முதல் மேல்முறையீட்டாளர் 17.08.2016-

ஆம் தேதியன்று புது டெல்லியில் இருந்து சிங்கப்பூர் சென்றார். கு.அ.ம (ம.அ) எண்.15370/2016-இல் பிணை மனு தாக்கல் செய்யும் போது, மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தைத் தாக்கல் செய்தனர், அதில் கூறப்பட்ட வழக்குரை அதிகார ஆவணம் 17.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் வழக்குரைஞர் திரு.விஜய்குமார் முன் கையொப்பமிடப்பட்டதாகக் கூறப்பட்டது. பிணை மனு மற்றும் வழக்குரை அதிகார ஆவணத்தின் நிலைக்கத்தக்க தன்மையை எதிர்த்து, எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசு முதனிலை ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்து, 1-ஆம் மேல்முறையீட்டாளர் புது டெல்லியிலிருந்து 17.08.2016-ஆம் தேதியன்று 23.15 மணிக்கு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றதாகச் சமர்ப்பித்தது. இதேபோல், 3-ஆம் மேல்முறையீட்டாளர் பெங்களூரில் இருந்து 18.08.2016-ஆம் தேதியன்று காலை 09.30 மணிக்கு சிங்கப்பூர் சென்றிருந்தார். மேல்முறையீட்டாளர்கள் 17.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் இருந்து, வழக்குரைஞர் முன்னிலையில் ஆணையுறுதியாவணம் மற்றும் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையெழுத்திட்டதைப் போல, 18.08.2016-ஆம் தேதியன்று முன்பிணை மனு தாக்கல் செய்ததாகச் சாட்டுரைக்கப்பட்டது. 23.08.2016-ஆம் தேதியிட்ட உயர்நீதிமன்ற உத்தரவின்படி, மேல்முறையீட்டாளர்கள் 29.08.2016-ஆம் தேதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி, மேற்படி முதனிலை ஆட்சேபனை தொடர்பாக விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டனர். இதன்படி,

குறித்த தேதியில் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றில் முன்னிலையாகி, வழக்குரை அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி கவனக்குறைவான பிழை என உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

5. எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரையில், மேல்முறையீட்டாளர்கள் அளித்த விளக்கங்கள் திருப்திகரமாக இல்லை என்றும், மேலும் அவை வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள எழுத்துப் பதிப்புக்கு முரணானது என்றும் உயர்நீதிமன்றம் கூறியது. மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த ஆணையுறுதியாவணத்தை சுட்டிக் காட்டிய உயர் நீதிமன்றம், 1-ஆம் மேல்முறையீட்டாளர், தான் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையெழுத்திட மதுரைக்கு வரவில்லை என்றும், மதுரையில் வழக்குரைஞர் திரு.விஜய்குமார் முன்னிலையில் அவர் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையெழுத்திடவில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளதைக் குறிப்பிட்டது. கற்றறிந்த தனியமர் நீதியரசர், முதல் நோக்கில் ஆவணம் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அது மதுரையில் கையொப்பமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டதுபோலக் காண்பிக்கப்பட்டு, உண்மையில் மதுரைக்கு வெளியே கையொப்பமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணம் உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தீர்வளித்தார். மேற்கண்ட காண்முடிவுகளின் பேரில், மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக அதிகார எல்லைக்குட்பட்ட காவல்

நிலையத்தில் புகார் அளிக்குமாறு பதிவாளருக்கு (நீதித்துறை) உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, பதிவாளர் (நீதித்துறை) மதுரை கே.புதூர் காவல் நிலையத்தில் 19.09.2016-ஆம் தேதியன்று புகார் அளித்தார். உயர்நீதிமன்ற பதிவாளர் (நீதித்துறை) அளித்த புகாரின் அடிப்படையில், 19.09.2016-ஆம் தேதியன்று மதுரை கே.புதூர் காவல் நிலையத்தில் இதச பிரிவுகள் 193, 466, 468 மற்றும் 471-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்ற எண் 1331/2016-இல் முதஅ பதிவு செய்யப்பட்டது.

6. மேல்முறையீட்டாளர்கள் மனக்குறைவுற்றதால் இந்த மேல்முறையீட்டு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். 26.09.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின்படி, குற்ற எண் 1331/2016 மற்றும் குற்ற எண் 5/2016-இல் மேல்முறையீட்டாளர்கள் மீது எந்தவிதமான வலுக்கட்டாயப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது மற்றும் மேல்முறையீட்டாளர்களை கைது செய்வதிலிருந்து இடைக்கால பாதுகாப்பை வழங்கியது.

7. மேல்முறையீட்டாளர்களின் கையொப்பம் வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ளது என்பதையும், அதன் தேதி முழுக்க முழுக்க எழுத்துப் பிழைதான் என்பதையும் உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்று மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான மூத்த வழக்குரைஞர் திரு.சஞ்சய் ஹெக்டே வலியுறுத்தியுள்ளார். மேல்முறையீட்டாளர்களுக்கு

எதிராக புகார் கொடுப்பது 'நீதியின் நலனுக்கு உகந்தது' என்பதற்கான காண்முடிவை உயர் நீதிமன்றம் பதிவு செய்யவில்லை என்றும், மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்ய காவல்துறையிடம் புகார் அளிக்குமாறு உத்தரவு பிறப்பித்ததில் உயர்நீதிமன்றம் பிழை செய்துவிட்டது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், முன்பிணை மனுவை தள்ளுபடி செய்ததற்கு, மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்குரை அதிகார ஆவணத்தை உயர்நீதிமன்றம் முக்கியக் காரணமாகக் கருதியதில் சட்டப்படி பிழை நடந்துள்ளது என்றும் வாதிடப்பட்டது.

8. தமிழக அரசின் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் திரு.யோகேஷ் கண்ணா, 18.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் வழக்குரை அதிகார ஆவணத்தில் 1-ஆம் மேல்முறையீட்டாளர் கையொப்பமிடவில்லை என உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது என்றும், அதனால் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றத்தில் பொய்யாவணம் புனைதல் செய்துள்ளதாகவும் மற்றும் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக புகார் அளிக்க பதிவாளருக்கு உயர்நீதிமன்றம் சரியான முறையில் உத்தரவு பிறப்பித்தது என்றும் சமர்ப்பித்தார். மேலும், முதல் மேல்முறையீட்டாளர் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததாலும், அவரது கணவர் - மூன்றாவது மேல்முறையீட்டாளர் தொழிலதிபர் மற்றும் செல்வாக்கு மிக்கவராகவும் இருப்பதாலும் புலனாய்வுக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றும், புலனாய்வு

அதிகாரி எழுப்பிய கேள்விகளுக்கு முதல் மேல்முறையீட்டாளர் மழுப்பலாக பதிலளித்துள்ளார் என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார். உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை நீக்கறவு செய்வதற்கும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகளின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை எண் 1331/2016-ஐ ரத்து செய்வதற்கும் எந்த காரணமும் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது. கற்றறிந்த வழக்குரைஞர் ***சச்சிதா நந்த் சிங் மற்றும் ஒருவர் எதிர் பீகார் மாநில அரசு மற்றும் ஒருவர் (1998) 2 எஸ்.சி.சி 493*** என்ற வழக்கின் முன்தீர்முடிவைச் சார்வுற்றார்.

9. நாங்கள் சமர்ப்பிப்புகளை கவனமாக பரிசீலித்துள்ளோம் மற்றும் பதிவில் வைக்கப்பட்டுள்ள எதிர்ப்பிற்குள்ளானத் தீர்ப்புரை மற்றும் பிற ஆவணங்களை ஆய்வு செய்துள்ளோம். வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், பொய்யாவணம் புனைதல் மற்றும் மோசடியான ஆவணத்தைத் தயாரித்ததற்காக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக புகார் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது சரியானதா என்ற வழக்கெழு வினா கருத்தில் கொள்ள வேண்டும்.

10. குற்றவியல் புகார் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு, அந்த புகார் பதிவு செய்யப்படுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதில் நீதிமன்றம் மனநிறைவடைவது அவசியம் என்பது நன்கு நிறுவப்பட்டுள்ளது. கு.வி.மு.ச. பிரிவு 340-இன் உண்மையான வார்த்தைகளை நீதிமன்றம் பயன்படுத்த

வேண்டும் என்பது அவசியமில்லை; ஆனால் நீதியின் நலன் கருதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தனது மனநிறைவைச் சுட்டிக்காட்டும் ஒரு காண்முடிவை பதிவு செய்ய வேண்டும். கு.வி.மு.ச. பிரிவு 340-இன் கீழ், நீதியின் நலனுக்கு மட்டுமே அரசுத்தரப்பில் வழக்குத் தொடரப்பட வேண்டும், வெறும் குற்றச்சாட்டுகள் அல்லது தனிப்பட்ட பழிவாங்கும் நோக்கத்திற்காக அல்ல. *இக்பால்சிங் மார்வா எதிர் மீனாக்ஷி மார்வா* **(2005) 4 எஸ்.சி.சி 370** என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்வளித்தது:-

> "**23.** கு.வி.மு.ச. பிரிவு 340-இன் அடிப்படையில், பிரிவு 195(1)(ஆ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றச் செயல் குறித்து புகார் செய்ய நீதிமன்றம் கட்டுப்படாது, ஏனெனில் அந்தப் பிரிவில் "நீதிமன்றத்தின் கருத்தில் நீதியின் நலன்களுக்கு உகந்தது" என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நடைமுறை நீதியின் நலன் கோரினால் மட்டுமே பின்பற்றப்படும், ஒவ்வொரு வழக்கிலும் அல்ல என்பதை இது காட்டுகிறது. புகாரைத் தாக்கல் செய்வதற்கு முன், நீதிமன்றம் முதனிலை விசாரணையை நடத்தி, பிரிவு 195(1)(ஆ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது நீதியின் நலன்களுக்கு உகந்தது என்ற முடிவை பதிவு செய்யலாம். அத்தகைய பொய்யாவணம் அல்லது பொய்யாவணம் புனைதலால் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்தின் அளவை எடைபோடாமல், அதன் விளைவு

அல்லது தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, நீதி நிர்வாகத்தின் மீது அத்தகைய குற்றச்செயல் ஏற்படுத்தும் விளைவு அல்லது தாக்கத்தை கருத்தில் கொண்டே தீர்மானிக்கப்படும். போலியான ஆவணம் அல்லது பொய்யாவணம் புனைதல் ஒரு நபருக்கு மிகவும் தீவிரமான அல்லது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தலாம்; உதாரணமாக, ஒரு விலைமதிப்பற்ற சொத்து அல்லது அந்தஸ்தை அவரிடமிருந்து பறிக்கலாம். ஆனால், அத்தகைய ஆவணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களில் ஒரு துணுக்காக மட்டுமே இருக்கலாம். அங்கு ஏராளமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கலாம், மேலும் நீதியை நிர்வகிக்கும் பரந்த கருத்தாக்கத்தின் மீது இந்த ஒற்றை சான்றின் தாக்கம் மிகக் குறைவாகவும் இருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில், நீதியின் நலன் கருதி, புகார் செய்வது சரியானது என்று நீதிமன்றம் கருதாது. ……"

11. கு.வி.மு.ச பிரிவு 195(1)(ஆ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றச் செயல் தொடர்பான ஒரு புகாரை தாக்கல் செய்வதற்கு முன், "நீதியின் நலனுக்கு இது பொருத்தமானது" என்று நீதிமன்றம் தன்னைத் திருப்திப்படுத்த வேண்டும். கு.வி.மு.ச பிரிவு 340-இல், அத்தகைய ஒரு நடைமுறை நீதியின் நலன் கோரினால் மட்டுமே பின்பற்றப்படும், ஒவ்வொரு வழக்கிலும் அல்ல என வழங்கப்பட்டுள்ளது. இ.த.ச. பிரிவுகள் 193, 467, 468 மற்றும் 471-இன் கீழ் புகார் அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான உத்தரவை

பிறப்பிக்கும் வகையில் பொய்யாவணம் புனைதல் செய்யப்பட்டதா என்பதற்கான வழக்கு முதல் நோக்கில் எழுந்துள்ளதா என்பதை தற்போதைய வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் பார்க்க வேண்டும்.

12. பானுமதி என்பவரால் அளிக்கப்பட்ட துன்புறுத்தல் புகாரின் பேரில், மேல்முறையீட்டாளர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 294(ஆ), 323, 344, 354-அ, 506(i) மற்றும் தமிழ்நாடு பெண்கள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம், 2002-இன் பிரிவு 4 ஆகியவற்றின் கீழ், குற்ற எண். 5/2016-இல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் எண். 1 டெல்லி உயர் நீதிமன்றத்தில் முன்பிணை மனு எண் 1627/2016-ஐ தாக்கல் செய்தார். டெல்லி உயர் நீதிமன்றம், 11.08.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் மேல்முறையீட்டாளர்களுக்கு இடைக்காலப் பாதுகாப்பை வழங்கியதுடன், தமிழ்நாட்டில் உள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றம் அல்லது மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் பெற மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிட்டது. புலனாய்வு அதிகாரியால் தேவைப்படும்போது புலனாய்வில் பங்கேற்க வேண்டும் என்பதற்கு உட்பட்டு, 22.08.2016-ஆம் தேதி வரை முதஅ எண் 5/2016-இல் மேல்முறையீட்டாளர்கள் மீது எந்தவொரு வலுக்கட்டாயப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றும் டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

13. டெல்லி உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், மேல்முறையீட்டாளர்கள் 18.08.2016-ஆம் தேதியன்று மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் பிணை மனு எண் 15370/2016-இல் முன்பிணை மனுவைத் தாக்கல் செய்தனர். அந்த மனுவில், "மேல்முறையீட்டாளர்கள், 17.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் கையொப்பமிடப்பட்டதாகக் கூறி, மதுரையைச் சேர்ந்த ஒரு வழக்குரைஞரால் சான்றளிக்கப்பட்ட ஒரு வழக்குரை அதிகார ஆவணத்தைத் தாக்கல் செய்து, நீதிமன்றத்தில் மோசடி செய்துள்ளனர், ஆனால் மேல்முறையீட்டாளர் எண். 1 17.08.2016-ஆம் தேதியன்று புது டெல்லியிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றுள்ளார்" என்று சாட்டுரைத்து, மாநில அரசு முதனிலை ஆட்சேபணையை எழுப்பியது. மேல்முறையீட்டாளர் எண். 3, 18.08.2016-ஆம் தேதியன்று பெங்களூருவிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். அவர்கள் தவறான வழக்குரை அதிகார ஆவணத்தைத் தாக்கல் செய்ததாகச் சாட்டுரைத்து, எதிர்மேல்முறையீட்டாளர் - மாநில அரசு மனுவின் நிலைக்கத்தக்கத்தன்மைக்கு ஆட்சேபனை எழுப்பியது. இதற்கிடையில், 22.08.2016-ஆம் தேதியன்று, புலனாய்வு அதிகாரி, குற்ற எண் 5/2016-இல் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாப்புச் சட்டம், 2012-இன் பிரிவு 9(ஐ)(என்) உ/இ பிரிவு 10, பிரிவு 16 உ/இ பிரிவு 17-ஐ இணைத்தார்.

14. உயர் நீதிமன்றம் முன்பிணை மனுவை நிராகரித்ததுடன், குற்ற எண் 5/2016-இல் கைதுக்கு முந்தைய பிணை வழங்க மறுத்துவிட்டது. வழக்குரைஞர் விஜயகுமார் முன்னிலையில் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிடுவதற்காக முதல் மேல்முறையீட்டாளர் மதுரைக்கு வரவில்லை என்றும், எனவே, ஆவணம் போலியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும், மதுரையில் கையொப்பமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது போல, அது மதுரைக்கு வெளியே கையொப்பமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், அது மேல்முறையீட்டாளர்களால் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் முதல் நோக்கில் தெரிகிறது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. *சச்சிதா நந்த் சிங்* வழக்கைச் சார்வுற்று, மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்ட செயல் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மோசடிக்கு சமம் என்று உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்ததுடன், வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிட்ட அனைத்து மேல்முறையீட்டாளர்கள் மீதும் குற்றவியல் அசல் மனு (ம.அ.) எண். 15370/2016-இல் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு பதிவாளருக்கு (நீதித்துறை) உத்தரவிட்டது.

15. இந்த மேல்முறையீடுகளில், குற்றவியல் அசல் மனு (ம.அ.) எண் 15370/2016-இல் வழக்குரை அதிகார ஆவணத்தைத் தாக்கல் செய்ததன் மூலம் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றத்தில் மோசடி செய்துள்ளதாக உயர் நீதிமன்றம் அளித்த காண்முடிவுகள் மற்றும் போலி செய்ததற்காக

மேல்முறையீட்டாளர்கள் மீது புகாரைப் பதிவு செய்யுமாறு பதிவாளருக்கு (நீதித்துறை) உத்தரவிட்டது குறித்து நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். முன்னர் சுட்டிக் காட்டப்பட்டபடி, மேல்முறையீட்டாளர்கள் 18.08.2016-ஆம் தேதியன்று குற்றவியல் அசல் மனு (ம.அ.) எண். 15370/2016-ஐ தாக்கல் செய்தனர், அதில் அவர்கள் தாக்கல் செய்த வழக்குரை அதிகார ஆவணத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

"17 ஆகஸ்ட், 2016-ஆம் தேதியன்று என் முன் நிறைவேற்றப்பட்டது. என் முன், எஸ். விஜயகுமார், எண். 51 சட்ட அறைகள், உயர் நீதிமன்றம் மதுரை."

வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள மேற்கண்ட கூற்று, மேல்முறையீட்டாளர் எண். 1 மற்றும் 3 ஆகியோர் 17.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிட்டது போலத் தெரிகிறது; ஆனால் உண்மையில் முதல் மேல்முறையீட்டாளர் மதுரைக்குச் செல்லவில்லை, மேலும் 17.08.2016-ஆம் தேதியன்று இரவு 11.15 மணிக்கு புது டெல்லியிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். 29.08.2016-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆணையுறுதி ஆவணத்தில், முதல் மேல்முறையீட்டாளர் எழுத்துப் பிழை ஏற்பட்டுள்ளதாகக் கூறியது குறிப்பிடத்தக்கது. மேல்முறையீட்டாளர் எண் 1, 16.08.2016-ஆம் தேதியன்று, அவரும் அவரது மகன்-மேல்முறையீட்டாளர் எண்.

2-உம் புது டெல்லியில் வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிட்டதாகவும், அது பெங்களூருவில் இருந்த மேல்முறையீட்டாளர் எண். 3 மூலம் கையொப்பமிடப்பட்டதாகவும் கூறியுள்ளார். வழக்குரை அதிகார ஆவணத்தைப் பெற்ற பிறகு, மேல்முறையீட்டாளர் எண். 3 அதே நாள் மாலை சாலை மார்க்கமாக மதுரைக்கு வந்து அதை வழக்குரைஞரிடம் ஒப்படைத்துவிட்டு, அதே நாள் சாலை மார்க்கமாகப் பெங்களூருவுக்குத் திரும்பிச் சென்றதாகவும், அதன் பிறகு மேல்முறையீட்டாளர் எண். 3 18.08.2016-ஆம் தேதியன்று காலை 09.30 மணிக்கு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் வழக்குரை அதிகார ஆவணம் தாக்கல் செய்யப்பட்டபோது, அது தவறுதலாக 18.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் கையொப்பமிடப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர்களால் வழங்கப்பட்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தெரிகிறது, மேலும் அதை நிராகரிக்கவும், 29.08.2016-ஆம் தேதியிட்ட அவர்களின் ஆணையுறுதி ஆவணத்தை நம்பாமல் இருக்கவும் எங்களுக்கு எந்தக் காரணமும் இல்லை.

16. ஒரு வழக்குரை அதிகார ஆவணம் என்பது ஒரு வழக்குரைஞருக்குத் தரப்பினர் சார்பாக முன்னிலையாக அதிகாரம் அளிக்கும் ஆவணம் மட்டுமே, மேலும் பொதுவாக, அது வழக்கின் தகுதிக்கூறுகளில் எந்தப் பாதிப்பையும்

கொண்டிருக்கவில்லை. ஒரு தரப்பினர் வழக்குரை அதிகார ஆவணத்தில் வேண்டுமென்றே தவறான தேதி மற்றும் இடத்தை ஏன் கொடுக்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் வாதத்தில் நாங்கள் வலுவைக் காண்கிறோம். மேல்முறையீட்டாளர் எண். 1, 17.08.2016-ஆம் தேதியன்று இரவு புது டெல்லியிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார், மேலும் மேல்முறையீட்டாளர் எண். 3, 18.08.2016-ஆம் தேதியன்று காலை 09.30 மணிக்கு பெங்களூருவிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்ற இந்த பொருண்மையை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதி ஆவணத்தில், முதல் மேல்முறையீட்டாளர், அவரும் அவரது மகன் மேல்முறையீட்டாளர் எண் 2-உம் 16.08.2016-ஆம் தேதியன்று வழக்குரை அதிகார ஆவணத்தில் கையொப்பமிட்டதாகவும், அது பெங்களூருவில் இருந்த அவரது கணவர்-மேல்முறையீட்டாளர் எண். 3-க்கு அனுப்பப்பட்டதாகவும், அவர் அதை மதுரையில் உள்ள வழக்குரைஞரிடம் ஒப்படைத்ததாகவும் தெளிவாகக் கூறியுள்ளார். மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள தங்கள் கையொப்பங்களை ஒப்புக்கொண்டனர். மேல்முறையீட்டாளர்களின் ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்ட சம்பவங்களின் வரிசை, எங்கள் பார்வையில், போலியான ஒரு வழக்கை உருவாக்கவில்லை. உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர்கள் தங்கள்

ஆணையுறுதி ஆவணத்தில் வைத்த கோரிக்கையை ஏன் நிராகரித்தது என்றும் மேலும் அவர்கள் நீதிமன்றத்தின் முன் தனிப்பட்ட முறையில் முன்னிலையானபோது தங்கள் விளக்கத்தை மீண்டும் வலியுறுத்தியதையும் ஏன் நிராகரித்தது என்றும் எந்தக் காண்முடிவையும் பதிவு செய்யவில்லை,.

17. தமிழ்நாடு அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், திரு.யோகேஷ் கண்ணா, சச்சிதா நந்த் சிங் வழக்கின் முன்தீர்முடிவைச் சார்வுற்று, ஆவணத்தைப் போலியாக உருவாக்கும் எந்தவொரு குற்றமும் நீதிமன்றத்தின் வளாகத்திற்கு வெளியே மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே செய்யப்பட்டிருந்தாலும், அதுவும் நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் ஒன்றாகவே கருதப்படும் என்று சமர்ப்பித்தார். பல்வேறு முன்தீர்முடிவுகளை பரிசீலித்த பிறகு, *சச்சிதா நந்த் சிங்* வழக்கில், பின்வருமாறு தீர்ப்பளிக்கப்பட்டது:-

> "11. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 340(1)-இல் வழங்கப்பட்டுள்ள முதனிலை விசாரணையின் நோக்கம், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அல்லது அந்த நீதிமன்றத்தில் ஒரு நடவடிக்கையில் சான்றாக வழங்கப்பட்ட ஒரு ஆவணம் தொடர்பாக நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் ஏதாவது குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதே ஆகும். வேறு வார்த்தைகளில்

கூறுவதானால், ஆவணம் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நேரத்தில் குற்றம் நடந்திருக்க வேண்டும்.

12. ஒரு ஆவணத்தைப் போலியாக உருவாக்கும் எந்தவொரு குற்றமும் நீதிமன்றத்தின் வளாகத்திற்கு மிக வெளியே மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே செய்யப்பட்டிருந்தாலும், அந்த ஆவணம் பின்னர் நீதிமன்றப் பதிவுகளை அடைந்ததால் மட்டுமே அது நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் ஒன்றாகக் கருதப்படும் என்பது ஒரு திணிக்கப்பட்ட சிந்தனையாகவே இருக்கும்."

18. நீதிமன்றத்தின் வளாகத்திற்கு வெளியே மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே போலியான ஆவணம் உருவாக்கப்பட்டாலும், அதுவும் நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் ஒன்றாகவே கருதப்படும் என்ற முன்மொழிவைப் பற்றி இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால் இந்த வழக்கில், குற்றவியல் அசல் மனு (ம.அ.) எண். 15370/2016-இல் மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்குரை அதிகார ஆவணம், குற்ற எண். 5/2016-இல் முன்பிணை கோரியது, அது ஒரு போலியான ஆவணம் என்று கூற முடியாது. முன்னர் சுட்டிக் காட்டப்பட்டபடி, மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அதிகார ஆவணத்தில் தங்கள் கையொப்பங்களை ஒப்புக்கொண்டனர். அவர்கள், அது 18.08.2016-ஆம்

தேதியன்று மதுரையில் வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டது தவறுதலாகப் பதிவு செய்யப்பட்டது என்று மட்டுமே சாட்டுரைக்கின்றனர். நிச்சயமாக, வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள கூற்று தவறான கூற்றாகும். எங்கள் கருத்துப்படி, உயர் நீதிமன்றம் அந்தக் குறை அல்லது பிழையை மோசடி என்று குறிப்பிடுவது நியாயமானதல்ல. மோசடி என்பது வேண்டுமென்றே செய்யும் ஏமாற்று வேலையைக் குறிக்கிறது, அது தவறான ஆதாயத்தை அடைவதையோ அல்லது மற்றவர்களுக்குத் தவறான இழப்பு அல்லது காயத்தை ஏற்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டது. நோக்கம் என்பது குற்ற மனநிலை ஆகும், இது நீதிமன்றத்தில் மோசடி செய்யப்பட்டது என்று தீர்ப்பளிக்க அத்தியாவசியமான கூறாகும். வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள கையொப்பத்தைப் பரிசோதித்த பிறகு, கையெழுத்து நிபுணர், அது மேல்முறையீட்டாளர்களின் கையொப்பம் அல்ல என்று கருத்துத் தெரிவித்துள்ளார், எனவே போலியான ஆவணத்தை உருவாக்க மேல்முறையீட்டாளர்களின் நோக்கம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று மாநில அரசு தரப்பு வழக்குரைஞர் சமர்ப்பித்துள்ளார். வழக்குரை அதிகார ஆவணத்தில் மேல்முறையீட்டாளர்கள் தங்கள் கையொப்பங்களை தாங்களே ஒப்புக்கொண்டதால், இந்தச் சமர்ப்பிப்பில் எந்தத் தகுதிக்கூறும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. வழக்குரை அதிகார ஆவணத்தில் தங்கள்

கையொப்பங்களை மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொண்டதைக் கருத்தில் கொண்டு, கையெழுத்து நிபுணரின் கருத்து முக்கியத்துவம் பெறும் என்று நாங்கள் கருதவில்லை. மேல்முறையீட்டாளர்கள் மோசடி செய்வதன் மூலம் அல்லது ஏமாற்று வேலையில் ஈடுபடுவதன் மூலம் எதையாவது பெற்றார்கள் என்று காட்ட பதிவில் எதுவும் இல்லை. குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லாததால், எங்கள் பார்வையில், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்கள் மீது மோசடி குற்றஞ்சாட்டியது நியாயமானதல்ல.

19. வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள கூற்று தவறானது என்று கருதிக் கொண்டாலும் கூட, வழக்குரை அதிகார ஆவணத்தில் வெறுமனே ஒரு தவறான அறிக்கை இருப்பது போலியான ஆவணத்தை உருவாக்கியதாக அமையாது, மேலும் மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப் புகாரைப் பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்க குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 340-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணமாக இருக்க முடியாது.

20. *அமர்சங் நாதாஜி எதிர் ஹர்திக் ஹர்ஷத்பாய் படேல் (2017) 1 எஸ்.சி.சி 117* என்ற வழக்கில், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 340-இன் கீழ் நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன், ஒரு முக்கியமான சாராம்சத்தில் வேண்டுமென்றே பொய் உள்ளது என்று நீதிமன்றம் மனநிறைவு அடைய வேண்டும், மேலும் குற்றச்சாட்டுக்கு ஒரு நியாயமான அடிப்படை இருக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஒரு அறிக்கையில் உள்ள சில

தவறுகள் அல்லது வெறுமனே தவறான கூற்று வழக்குத் தொடர வழிவகுக்காது என்று கருத்து தெரிவித்ததுடன், பின்வருமாறு தீர்ப்பளிக்கப்பட்டது:-

"6. நீதித்துறை நடவடிக்கைகளில் ஒரு நபர் ஒரு முரண்பட்ட அறிக்கையை அளித்தார் என்ற வெறுமையான பொருண்மை மட்டும், இந்திய தண்டனைச் சட்டம், 1860 (45 / 1860) (இனிமேல் "இதச" என்று குறிப்பிடப்படும்)-இன் பிரிவுகள் 199 மற்றும் 200-இன் கீழ் வழக்குத் தொடர எப்போதும் போதுமானதாக இருக்காது; ஆனால், நீதித்துறை நடவடிக்கைகளின் எந்தவொரு கட்டத்திலும் பிரதிவாதி வேண்டுமென்றே தவறான அறிக்கை அளித்துள்ளார் அல்லது அதே ஆவணத்தை நீதித்துறை நடவடிக்கைகளின் எந்தவொரு கட்டத்திலும் பயன்படுத்துவதற்காக தவறான சான்றுகளை உருவாக்கியுள்ளார் என்று காட்டப்பட வேண்டும். மேற்கண்ட நிலைமை வெளிப்பட்ட பிறகும், நீதி நலன்களில், தவறான சான்றுகள் மற்றும் பொது நீதிக்கு எதிரான குற்றங்கள் மற்றும் குறிப்பாக குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 340(1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து விசாரணை தொடங்கப்படுவது உகந்தது என்று, ஒட்டுமொத்த பொருண்மை விவரம் மற்றும் அத்தகைய வழக்குத் தொடுப்பின் சாத்தியமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் ஒரு கருத்தை உருவாக்க வேண்டும். (காண்க: கே.டி.எம்.எஸ். முகமது எதிர் இந்திய அரசு (1992) 3 எஸ்சிசி 178).

அத்தகைய விசாரணை நீதியின் நலன்களுக்குத் தேவைப்படுகிறது மற்றும் வழக்கின் பொருண்மைகளில் பொருத்தமானது என்று நீதிமன்றம் திருப்தி அடைய வேண்டும்."

அதே பார்வை *சிந்தாமணி மால்வியா எதிர் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம்* (2018) 6 எஸ்சிசி 15-இலும் ஒப்புதலுடன் மேற்கோள் காட்டப்பட்டது.

21. மேற்கண்ட முன்தீர்முடிவுகளின் விகிதாச்சாரத்தைப் பயன்படுத்தும்போது, மேல்முறையீட்டாளர்கள் சேதம் அல்லது காயம் அல்லது வேறு ஏதேனும் செயல்களைச் செய்ய நோக்கம் கொண்டிருந்தனர் என்று காட்டுவதற்கு முதல் நோக்கில் ஆதாரம் எதுவும் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள சர்ச்சைக்குரிய கூற்று, போலியான தகவல்களை அளிக்கும் நோக்கம் இல்லாமல், தற்செயலான பிழையாகத் தோன்றுகிறது என்பதால், மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப் புகாரைப் பதிவு செய்ய உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நிலைநிறுத்த முடியாது என்றும், அது நீக்கறவு செய்யப்படத் தகுதியானது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

22. குற்ற எண் 1331/2016-இல், உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டது, மேலும் புலனாய்வு முடிந்தவுடன், குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மாநில அரசு தரப்பு வழக்குரைஞர் சமர்ப்பித்தார். *பெப்சி ஃபுட்ஸ் லிமிடெட் மற்றும் அன்ர்*

எதிர் சிறப்பு நீதித்துறை நடுவர் மற்றும் பிறர் (1998) 5 **எஸ்சிசி** 749 என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டபடி, ஒரு குற்றவியல் வழக்கில் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை விடுப்பது ஒரு தீவிரமான விடயம் ஆகும்; அதிலும் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் பதிவு செய்யப்பட்ட ஒரு குற்றவியல் வழக்கில் ஒரு நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்வது அதைவிடத் தீவிரமானது. மேல்முறையீட்டாளர்கள் தாங்களே வழக்குரை அதிகார ஆவணத்தில் தங்கள் கையொப்பங்களை ஒப்புக்கொண்டதால் மற்றும் 18.08.2016-ஆம் தேதியன்று மதுரையில் கையொப்பமிட்டதாக வழக்குரை அதிகார ஆவணத்தில் உள்ள கூற்று ஒரு தற்செயலான பிழை என்பதால், விசாரணை தொடர்ந்தாலும், மேல்முறையீட்டாளர்கள் போலிக் குற்றங்கள் மற்றும் போலியான ஆவணத்தை உருவாக்கியதற்காக தண்டிக்கப்படுவதற்கு எந்த வாய்ப்பும் இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம்.

23. *மத்திய புலனாய்வுப் பிரிவு எதிர் ரவி சங்கர் ஸ்ரீவஸ்தவா, ஐ.ஏ.எஸ் மற்றும் ஒருவர்* (2006) 7 **எஸ்சிசி** 188 என்ற வழக்கில், பின்வருமாறு தீர்ப்பளிக்கப்பட்டது:-

"7. இந்தத் தன்மையுள்ள வழக்கில் சட்டத்தின் பிரிவு 482-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவது விதிவிலக்கு ஆகும், விதி அல்ல. இந்த பிரிவு உயர் நீதிமன்றத்திற்கு எந்த புதிய அதிகாரங்களையும் வழங்கவில்லை. இது சட்டத்தை இயற்றுவதற்கு முன்பு நீதிமன்றம்

வைத்திருந்த உள்ளார்ந்த அதிகாரத்தை மட்டுமே சேமிக்கிறது. உள்ளார்ந்த அதிகாரம் பயன்படுத்தப்படக்கூடிய மூன்று சூழ்நிலைகளை இது எதிர்பார்க்கிறது, அதாவது: (i) சட்டத்தின் கீழ் ஒரு உத்தரவுக்கு செயல்திறன் அளிப்பது, (ii) நீதிமன்றத்தின் நடைமுறையை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பது, மற்றும் (iii) நீதியின் முடிவுகளைப் பாதுகாப்பது. உள்ளார்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதை நிர்வகிக்கும் எந்த நெகிழ்வற்ற விதியையும் வகுப்பது சாத்தியமில்லை அல்லது விரும்பத்தக்கது அல்ல. ..... அதிகாரங்களைப் பயன்படுத்துவதில், ஒரு நடவடிக்கை அதன் தொடக்கம்/தொடர்ச்சி நீதிமன்றத்தின் நடைமுறையைத் துஷ்பிரயோகம் செய்வதற்குச் சமம் என்று கண்டறிந்தால், அல்லது இந்த நடவடிக்கைகளைத் தள்ளி வைப்பது வேறுவிதமாகக் நீதியின் முடிவுகளுக்குச் சேவை செய்யும் என்றால், நீதிமன்றம் எந்தவொரு நடவடிக்கையையும் தள்ளி வைக்க நியாயப்படுத்தப்படும். புகாரில் எந்தக் குற்றமும் வெளிப்படுத்தப்படாதபோது, நீதிமன்றம் உண்மை கேள்வியை ஆராயலாம். ஒரு புகார் தள்ளி வைக்கக் கோரப்படும்போது, புகார்தாரர் என்ன குற்றம் சாட்டியுள்ளார் என்பதையும், குற்றச்சாட்டுகள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் ஏதாவது குற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் மதிப்பிடுவதற்குப் சான்றுகளைப் பரிசீலிப்பது அனுமதிக்கப்படுகிறது."

24. இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றவியல் வழக்குத் தொடர்வதன் மூலம் எந்தப் பயனும் இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். வழக்கின் தகுதிக்கூறுகளுக்குள் மேலும் செல்லாமல், நாங்கள் குற்ற எண் 1331/2016-இல் உள்ள முதஅ-ஐ தள்ளி வைக்கிறோம், மேலும் சம்பந்தப்பட்ட குற்றவியல் நடுவர் முன் நிலுவையில் உள்ள குற்ற அறிக்கையையும் இரத்து செய்கிறோம். முதஅ மற்றும் குற்ற அறிக்கை இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் மட்டுமே மற்றும் நீதியின் நலனுக்காக மட்டுமே இரத்து செய்யப்படுகிறது. இந்த வழக்கை ரத்து செய்ததன் பலனைப் பயன்படுத்திக் கொண்டு, மேல்முறையீட்டாளர்கள் வேறு எந்த அடுத்தடுத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

25. **குற்ற எண். 5/2016:** எதிர்ப்பிற்குள்ளான உத்தரவில், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு முன்பிணை வழங்க மறுத்துவிட்டது. 26.09.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம், உச்ச நீதிமன்றம் தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 5/2016-இல் மேல்முறையீட்டாளர்களுக்கு இடைக்காலப் பாதுகாப்பை வழங்கியது. மேல்முறையீட்டாளர்கள் பாதிக்கப்பட்ட பானுமதியுடன் சமரசம் செய்துள்ளதாகவும், அந்த சமரசத்தின் அடிப்படையில், அவர்கள் ஏற்கனவே மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி மனுவைத் தாக்கல்

செய்துள்ளதாகவும், அதில் உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தை அணுகுமாறு தரப்பினர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார். குற்ற எண். 5/2016-இல் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் பாதுகாப்பை அந்த வழக்கு முடிவடையும் வரை நீட்டிப்பதைத் தவிர, அந்த வழக்கின் தகுதிக்கூறுகளுக்குள் செல்ல நாங்கள் விரும்பவில்லை.

26. **குற்ற எண் 276/2016**: 11.10.2016-ஆம் தேதியன்று, மேல்முறையீட்டாளர்கள் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் சேர்ந்து, குற்ற எண். 5/2016-இல் பாதிக்கப்பட்டவர்-பானுமதியின் வழக்குரைஞராக இருந்த சுகந்தி என்பவரின் வீட்டுப் பொருட்கள் மற்றும் காரை சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அந்த சுகந்தியின் உறவினரான முத்து என்பவரால் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 1s47, 148, 448, 506(II) மற்றும் தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டம், 1992-இன் பிரிவு 3 ஆகியவற்றின் கீழ், திருநெல்வேலி திசையன்விளை காவல் நிலையத்தின் குற்ற எண். 276/2016-இல் மேல்முறையீட்டாளர்கள் மீது ஒரு குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தில் முன்பிணை மனுவைத் தாக்கல் செய்தனர், மேலும் 18.11.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின்

மூலம், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் எண். 2 மற்றும் 3-க்கு முன்பிணை வழங்கியதுடன், மேல்முறையீட்டாளர் எண். 1-ஐ காவலில் வைத்து விசாரணை செய்வது தேவை என்ற கருத்தை கற்றறிந்த தனியமர் நீதியரசர் எடுத்து, மேல்முறையீட்டாளர் எண். 1-க்கு முன்பிணை வழங்க மறுத்துவிட்டார். 18.11.2016-ஆம் தேதியிட்ட அந்த உத்தரவே சிஅம(குற்ற) எண். 9064/2016 மற்றும் 9065/2016-இல் எதிர்ப்பிற்குள்ளான விடயமாகும். இந்த நீதிமன்றத்தின் முன் அனுமதிக்கு வந்தபோது, 22.11.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம், இந்த நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் எண். 1-க்கு இடைக்காலப் பாதுகாப்பை வழங்கியது. எனவே, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 506(ii) மற்றும் தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டம், 1992-இன் பிரிவு 3 ஆகியவற்றின் கீழ், குற்ற எண். 276/2016-இல் (திசையன்விளை, திருநெல்வேலி) மேல்முறையீட்டாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் எண். 1-ஐ காவலில் வைத்து விசாரணை செய்வது அவசியம் என்று கூறி உயர் நீதிமன்றம் அவருக்கு முன்பிணை வழங்க மறுத்துவிட்டது, அதேசமயம் மேல்முறையீட்டாளர் எண். 2 மற்றும் 3-க்கு முன்பிணை வழங்கப்பட்டது.

27. இதன் விளைவாக, அனைத்து மேல்முறையீடுகளும் கீழ்க்கண்டவாறு தீர்க்கப்படுகின்றன:- **சி.அ.ம.(குற்றவியல்) எண்.7252/2016**:- மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப் புகாரைப் பதிவு செய்ய உத்தரவிட்ட உயர்

நீதிமன்றத்தின் எதிர்ப்பிற்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது, மேலும் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, குற்ற எண். 1331/2016 (கே. புதூர் காவல் நிலையம்)-இல் உள்ள முதஅ மற்றும் அதன் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கை தள்ளி வைக்கப்படுகின்றன மற்றும் அதன்படி மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. பத்தி எண். (23)-இல் சுட்டிக் காட்டப்பட்டபடி, குற்ற எண். 1331/2016-இல் உள்ள முதஅ-ஐ ரத்து செய்ததன் பலனைப் பயன்படுத்திக் கொண்டு, மேல்முறையீட்டாளர்கள் வேறு எந்த அடுத்தடுத்த அல்லது தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது.

28. **சி.அ.ம.(குற்றவியல்) எண்.7287/2016 மற்றும் 8206/2016**: குற்ற எண். 5/2016 (ஏ.டபுள்யு.பி.எஸ்., புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம்)-இல் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் பாதுகாப்பு, குற்ற எண். 5/2016-இன் கீழ் எழும் குற்றவியல் வழக்கு முடிவடையும் வரை நீட்டிக்கப்படுகிறது.

29. **சி.அ.ம.(குற்றவியல்) எண்.9064/2016 மற்றும் 9065/2016**: குற்ற எண். 276/2016 (திசையன்விளை காவல் நிலையம், திருநெல்வேலி)-இல் 22.11.2016-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் பாதுகாப்பு, குற்ற எண். 276/2016-இன் கீழ் எழும் குற்றவியல் வழக்கு முடிவடையும் வரை நீட்டிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்களுக்கு

குற்ற எண். 276/2016-இல் முன்பிணை வழங்கப்படுகிறது, இது குற்றவியல் வழக்கு முடிவடையும் வரை செல்லுபடியாகும். குற்ற எண். 276/2016-இல் உள்ள குற்றவியல் வழக்கை முடிவு செய்வதைமப் பொறுத்தவரையில், மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தை அணுகலாம், மேலும் உயர் நீதிமன்றம் அதை அதன் சொந்த தகுதிக்கூறுகளின் அடிப்படையில் பரிசீலிக்கும்.

மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."